දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ්අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல )
My No. ) FHB/CNU/01/Gen/2022

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )
Date ) 13.11.2022

# සෞඛ්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார அமைச்சு
# Ministry of Health

பொதுச் சுற்று நிருபம் இல: 01-13/2020(i)

சகல மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்கள்
சகல பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
சகல நிறுவனத் தலைவர்கள்
சகல சுகாதார வைத்திய அதிகாரிகள்

**பொதுச் சுற்றறிக்கை இலக்கம் 01-13/2020 ல் - "ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் கடுமையான மற்றும் மிதமான தீவிர போஷணைக் குறைபாடு முகாமைத்துவத்தின் மேலதிக சேர்க்கை - இலங்கையில் உள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கான கையேடு":**

**"ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் தீவிர போஷணைக் குறைபாட்டினை (மெலிதல்) தடுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்"**

சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகத்தால் செயல்படுத்தப்படும் தேசிய தாய் மற்றும் சேய் நலத் திட்டம், வளர்ச்சிக் கண்காணிப்பு மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றில் முக்கியமாக கவனம் செலுத்தி அதனை ஒரு பகுதியாக ஒருங்கிணைக்கிறது. 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே போஷணைக் குறைபாட்டின் ஆரம்ப, முதன்மை மற்றும் இரண்டாம் நிலைத் தடுப்பை நோக்கமாகக் கொண்ட வளர்ச்சிக் கண்காணிப்பு மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் தற்போது இத்திட்டத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் மிதமான தீவிர போஷணைக் குறைபாடு (MAM) மற்றும் கடுமையான தீவிர போஷணைக் குறைபாடு (SAM) ஆகியவற்றை நிர்வகித்தல், இது இரண்டாம் நிலை தடுப்பு நடவடிக்கையாகும், இது போஷணை மறுவாழ்வு திட்டம் (NRP) எனக் குறிப்பிடப்படுவதுடன் இது இத்திட்டத்தின் ஒருங்கிணைந்த ஓர் கூறாகும்.

இத்திட்டத்தில் தற்போது உள்வாங்கப்படும் பயனாளர்களின் எண்ணிக்கையினைக் கருத்திற்கொண்டு அதனை மேம்படுத்துமுகமாக 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குரிய வழக்கமான வளர்ச்சிக் கண்காணிப்பு மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் பயனாளர்களின் உள்வாங்கல்களை அதிகரிக்கவும் தற்போதைய நெருக்கடியான நிலையில் மேலதிக நடவடிக்கைகள் அவசரமாகத் தேவைப்படுகின்றது. எனவே 1-13/2020 இலக்க பொதுச் சுற்று நிருபம் மற்றும் "ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் கடுமையான மற்றும் மிதமான தீவிர போஷணைக் குறைபாடுகளை நிர்வகிப்பதற்கான இலங்கையில் சுகாதாரப் பணியாளர்களுக்கான கையேடு" என்ற வழிகாட்டுதல்களுக்கு மேலதிகமாக 'ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான" தீவிர போஷணைக் குறைபாட்டைத் தடுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்' பற்றிய இந்த மேலதிக சேர்க்கை (இணைப்பு) இத்துடன் வழங்கப்படுகிறது.

பின்வரும் நோக்கங்களுடன் இவ் மேலதிக சேர்க்கை வெளியிடப்பட்டுள்ளது

1. மெலிதல் ஆபத்தை முன்கூட்டியே கண்டறிவதை மேம்படுத்துவதற்காக வழக்கமான வளர்ச்சிக் கண்காணிப்பு மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றை வலுப்படுத்துதல், மேலும் மெலிதலை

தடுப்பதன் மூலம், பொது சுகாதாரப் பணியாளர்களால் மெலிவடையும் குழந்தைகளைப் பரிந்துரைத்தல் சரியாக முகாமைத்துவம் செய்தல் மற்றும் பின்தொடர்தல்.

2. சுகாதார மருத்துவ அதிகாரி மட்டத்தில் மிதமான தீவிர போஷணைக் குறைபாட்டினை (MAM) முகாமைத்துவம் செய்தலை நெறிப்படுத்துதல்
3. கடுமையான தீவிர போஷணைக் குறைபாடு (SAM) உள்ள குழந்தைகளின் பரிந்துரை மற்றும் சிகிச்சையை வலுப்படுத்துதல் மற்றும் வெளிச்செல் நிலையங்கள் ஊடாக சிகிச்சை தவறியவர்களைக் குறைத்தல், முதன்மை பராமரிப்பு நிலை சிகிச்சை நிறுவனங்களில் (மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் முதன்மை மருத்துவப் பிரிவுகள் - DH/PMCU), NRP பற்றிய தகவல் ஓட்டத்தை நெறிப்படுத்துதல்
4. நோய்வாய்ப்பட்ட குழந்தைகளிற்கான உணவூட்டல் உளவளத்துணையை வெளி நோயாளர் பிரிவுகளில், முதன்மை பராமரிப்பு நிலையங்கள் மாவட்ட வைத்தியசாலை நோய் தீர்க்கும் நிறுவனங்களில் (DH/PMCU) முன்னேற்றுதல் இதன் போது போஷணைக் குறைபாட்டுக்கும் சிறப்பு முக்கியத்துவம் அளித்தல்.

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள “ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் கடுமையான மற்றும் மிதமான தீவிர போஷணைக் குறைபாடுகளை நிர்வகித்தல் - இலங்கையில் சுகாதாரப் பணியாளர்களுக்கான கையேடு” என்ற வழிகாட்டுதலை சிறந்த முறையில் பயன்படுத்துமாறு தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் துறைகளில் உள்ள அனைத்து சுகாதாரப் பணியாளர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள். **“ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் தீவிர போஷணை குறைபாட்டை தடுத்தல் மற்றும் நிர்வகித்தல்”.**

தயவு செய்து இதனை முதன்மையான முன்னுரிமையாகக் கருதி, இந்த மேலதிக சேர்க்கை மற்றும் வழிகாட்டுதலிலுள்ள இத்துடன் இணைக்கப்பட்டுள்ள உள்ளடக்கங்களை, உங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிறுவன மற்றும் கள சுகாதார கவனிப்பு ஊழியர்களிடையே பரப்பி எமது குழந்தைகளின் குறுகிய கால மற்றும் நீண்ட கால போஷணையைப் பாதுகாப்பதற்காகவும் முன்னேற்றத்தை இலக்காகவும் கொண்டு இந்த அறிவுறுத்தல்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தவும், கண்காணிக்கவும் பின்பற்றவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலதிக விவரங்களுக்கு;

**Website :**
**_http://fhb.health.gov.lk/index.php/en/technical-units/child-nutrition-unit_**
**SAM & MAM Management Resource Folder:**
**_https://drive.google.com/drive/folders/1JeyATdZeLBKmsNvjdUGtbZJan11pt65R?usp=sharing_**

වෛද්‍ය අසේල ගුණවර්ධන
සෞඛ්‍ය සේවා අධ්‍යක්ෂ ජනරාල්
සෞඛ්‍ය අමාත්‍යාංශය
"සුවසිරිපාය"
385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත,
කොළඹ 10.

வைத்தியர் அசேல குணவர்த்தன
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

செயலாளர் - சுகாதார அமைச்சு
மேலதிக செயலாளர் பொது சுகாதார சேவைகள்.
மேலதிக செயலாளர் மருத்துவ சேவைகள்
பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் - பொது சுகாதார சேவைகள் I & II
பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் - மருத்துவ சேவைகள் I & II
பணிப்பாளர்- தாய் மற்றும் சேய் சுகாதாரம்
பணிப்பாளர்- தோட்ட மற்றும் நகர்ப்புற சுகாதாரம்
பணிப்பாளர்- போஷணைப் பிரிவு
பணிப்பாளர்- சுகாதாரக் கல்வி மற்றும் விளம்பரம்
தலைமை தொற்றுநோயியல் நிபுணர்
பணிப்பாளர்- சுற்றுச்சூழல் & தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு
பணிப்பாளர்- தொற்றா நோய்கள்
பணிப்பாளர்- மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்
பணிப்பாளர்- மருத்துவ விநியோகம்
பணிப்பாளர்- தனியார் சுகாதாரத் துறை மேம்பாட்டு
பணிப்பாளர்- மருத்துவ சேவைகள்
பீடாதிபதிகள்- அனைத்து மருத்துவ பீடங்கள்
தலைவர்-இலங்கை சிறுவர் மருத்துவ நிபுணர்கள் கல்லூரி
தலைவர்-இலங்கை சமூக மருத்துவ நிபுணர்கள் கல்லூரி
தலைவர்-இலங்கை போஷணை மருத்துவர் சங்கம்
தலைவர்-இலங்கை மருத்துவர் சங்கம்
தலைவர்-இலங்கை மருத்துவ நிர்வாகிகள் கல்லூரி
தலைவர்-இலங்கை பொது மருத்துவர்கள் கல்லூரி
தலைவர் - இலங்கையின் சுயாதீன மருத்துவ நிபுணர்கள் சங்கம்
தலைவர் - போஷணைக்கான சங்கம்

பொதுச்சுற்று நிருபம் இல. 01-13/2020 (i)

**பொதுச் சுற்றறிக்கை இலக்கம் 01-13/2020 ல் - "ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் கடுமையான மற்றும் மிதமான தீவிர போஷணைக் குறைபாடு முகாமைத்துவத்தின் மேலதிக சேர்க்கை - இலங்கையில் உள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கான கையேடு"**

**"ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் தீவிர போஷணைக் குறைபாடு (மெலிதல்) தடுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்"**

இந்த வழிகாட்டுதலின் நோக்கம் பொதுச் சுற்றறிக்கை இல. 1-13/2020 ல் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளை ஒழுங்கமைக்க சம்பந்தப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் உட்பட ஏனைய அப்பகுதிகளிலுள்ள சுகாதார நிறுவனங்கள் மற்றும் MOH அலுவலக பணியாளர்களுக்கு சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட "ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் போஷணையின் கீழ் கடுமையான மற்றும் மிதமான நிலைமைகளை நிர்வகித்தல் - இலங்கையில் சுகாதார ஊழியர்களுக்கான கையேடு" வழிகாட்டுதல் எனும் ஆவணத்திற்கு மேலதிகமாக வழிகாட்டுதல்களை வழங்குவதாகும்.

1. **மெலிதல் ஆபத்தை முன்கூட்டியே கண்டறிவதை மேம்படுத்துவதற்காக வழக்கமான வளர்ச்சிக் கண்காணிப்பு மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றை வலுப்படுத்துதல், மேலும் மெலிதலைத் தடுப்பதன் மூலம், பொது சுகாதாரப் பணியாளர்களால் மெலிவடையும் குழந்தைகளைப் பரிந்துரைத்தல், சரியாக முகாமைத்துவம் செய்தல் மற்றும் பின்தொடர்தல்**

   5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான வளர்ச்சிக் கண்காணிப்பு மற்றும் மேம்படுத்தல் திட்டத்தின் பிரதான நோக்கம், மிதமான/கடுமையான மெலிதல் (MAM மற்றும் SAM), அல்லது அதிக எடை/உடல் பருமன், நீண்ட கால வளர்ச்சி குன்றிய நிலை காரணமாக ஏற்படும் குள்ளத் தன்மை போன்றவற்றை முன்கூட்டியே கண்டறிந்து தடுப்பதன் மூலம் உகந்த வளர்ச்சி மற்றும் போஷாக்கை மேம்படுத்துவதாகும். போஷாக்கு மீளமைப்புத் திட்டமானது (NRP), MAM/SAM ஏற்பட்டுள்ள குழந்தைகளின் போஷணை மறுவாழ்வை நோக்கமாகக் கொண்டுள்ளது.

   - பொது சுகாதார ஊழியர்களால் MOH பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும் வழக்கமான வளர்ச்சி கண்காணிப்பு மற்றும் மேம்படுத்தல் திட்டம் பலப்படுத்தப்படுவதற்கு, அதிக அர்ப்பணிப்பு மற்றும் உந்துதலுடன் செயல்படுதல் அவசியமாகும். வயதுக்கேற்ற நிறை வரைபில் (மெலிதல் மற்றும் அதிக எடையின் ஆபத்து) எடையின் இயல்பான வளர்ச்சி முறையிலிருந்து ஆரம்ப விலகல்களைக் கண்டறிவதற்கும், இவ்வாறான போக்குகளை மாற்றியமைக்க உடனடி நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

   PHM களின் கள நிறை பார்க்கும் நிலையங்களில் பின்வரும் முக்கியப் பொறுப்புகள் இருக்க வேண்டும்:

   a. உகந்த வளர்ச்சியை பராமரிக்க ஆதரவு வழங்கல்.
   b. வளர்ச்சி குன்றுதலை (அல்லது அதிக எடை போக்கை) முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் கண்டறியும் நேரத்திலேயே பொருத்தமான தலையீடுகள் செய்தல். வயதுக்கேற்ற நிறை வரைபில் (பெரும்பாலான குழந்தைகளில் வளர்ச்சி குன்றுதல் அல்லது "மெலிவதற்கான ஆபத்து" மற்றும் சில குழந்தைகளில் "அதிக எடைக்கான ஆபத்தை" குறிக்கும் மேல்நோக்கிய விலகல்) நிறையின் இயல்பான வளர்ச்சி முறையிலிருந்து ஆரம்ப விலகல்களைக் கண்டறிவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். பொருத்தமான IYCF/போஷணை உளவள ஆலோசனை மற்றும் பிற தொடர்புடைய நடவடிக்கைகள் மூலம் இத்தகைய போக்குகளை உடனடியாக மாற்றுதல் வேண்டும். ஆரம்ப விலகல்களுக்கான தலையீடுகள் அத்தகைய விலகல்களை முதலில் கண்டறிந்தவுடன் PHM ஆல் தொடங்கப்பட வேண்டும் மற்றும் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக இந்த குழந்தைகளின் நிறையை ஒரு மாதத்தில் மீண்டும் எடுக்க வேண்டும். எந்த மாற்றமும் காணப்படவில்லை எனில், அவர்களை குழந்தை நல கிளினிக் (CWC) MOH ன் மேலதிக தலையீடுகளை மேற்கொள்வதற்காக பரிந்துரைக்கப்படல் வேண்டும்.
   c. MAM மற்றும் SAM ஆபத்தில் உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து (அத்துடன் அதிக நிறையின் ஆபத்து) அவர்களை உடலியல் அளவீட்டின் மூலம் உறுதிப்படுத்துவதற்காக CWC க்கு அவர்களைப் பரிந்துரைத்தல் (CWC இல் நீளம்/உயரம் மதிப்பீட்டுடன்), eRHMIS கட்டமைப்பில் பதிந்து அதற்குப் பிறகு பொருத்தமான பரிந்துரைகளையும் / முகாமையையும் செய்தல்.
   d போஷணைக் குறைபாடு உள்ள குழந்தைகளை நெருக்கமாகப் பின்தொடர்தல் உ-ம் சிகிச்சை மற்றும் பிற வழிகாட்டல்களுக்கு இணங்கச்செய்து கவனித்தல், இடையில் விலகிச் செல்பவர்களைத் தடுத்தல்.

- இந்தச் சேவைகளை சரியாக வழங்கப்படுவதை உறுதிசெய்ய CHDR இன் B பகுதி உட்பட வளர்ச்சி கண்காணிப்பு மற்றும் மேம்பாடு பதிவேடு மற்றும், இது தொடர்பான பதிவுக்ளை முறையாகப் பராமரித்தல் அவசியம்

- குறிப்பாக கள நிறை பார்க்கும் நிலையம் மற்றும் CWC மட்டத்தில் இந்தச் சேவைகளின் தரத்தைப் பேணுவதற்கு இந்தச் செயல்பாடுகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பை வலுப்படுத்துவது அவசியம். வளர்ச்சி குறைதல்/அதிக எடை போக்கை முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் மாற்றியமைத்தல் ஆகியவற்றின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு MOH களால் புத்தாக்கமான முறைகள் பயன்படுத்தப்படல் வேண்டும். உள்ளூர் மற்றும் மாதாந்த மாநாடுகளில் வழக்கமான மதிப்பீட்டு நடவடிக்கைகள் தொழில்நுட்ப படிநிலையின் வழிகாட்டுதலின் கீழ் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படல் வேண்டும் PHM அளவில் கண்காணிப்பதற்கு, பின்வருவனவற்றைப் பயன்படுத்தலாம்:
  a. *அந்த மாதத்தில் நிறுக்கப்பட்ட மொத்த குழந்தைகளின் எண்ணிக்கையில், அந்த குறிப்பிட்ட மாதத்தில் கண்டறியப்பட்ட **ஆரம்ப** வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் எண்ணிக்கை*
  b. *முந்தைய மாதத்தில் **ஆரம்ப** வளர்ச்சி குன்றியதாகக் கண்டறியப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையில், அந்த மாதத்தில் வளர்ச்சி குன்றிய நிலையிலிருந்து மீண்டு திரும்பிய குழந்தைகளின் எண்ணிக்கை*

**2. MOH மட்டத்தில் MAM நிர்வாகத்தை நெறிப்படுத்துதல்**

- MAM குழந்தைகள் MOH கிளினிக்குகளில் தகுந்த உணவு முறை மாற்றங்களுடன் நிர்வகிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்கள் MAM இலிருந்து குணமடையும் வரை குறுகிய கால குறைநிரப்பாக திரிபோஷாவுடன் நிர்வகிக்கப்படல் வேண்டும். இந்தக் குழந்தைகளை பொருத்தமானது என கருதப்படும் CWC அல்லது MOH இன் போஷணைக் கிளினிக்கில் நிர்வகிக்கலாம், சம்பந்தப்பட்ட PHM இன் நெருக்கமான கண்காணிப்புடன் அனைத்து பரிந்துரைகளும் வீட்டு மட்டத்தில் பராமரிப்பாளர்களால் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்யவும். MOH மட்டத்தில் அனைத்துத் தலையீடுகளும் செய்த போதிலும் 3 மாதங்களுக்குப் பின்னரும் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை என்றால், இந்தக் குழந்தைகளை மேலதிக பரிசோதனைகளுக்காக அருகில் உள்ள சிறப்பு மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும்.
- திரிபோஷா வழங்குவதற்காக பதிவுசெய்யப்பட்ட MAM குழந்தைகளின் பட்டியல் ஒவ்வொரு CWC யிலும் குறித்த PHM இடமும் பராமரிக்கப்பட வேண்டும்.

  MAM குழந்தைகளின் முன்னேற்றம் உள்ளூர் மற்றும் மாதாந்த மாநாடுகள் போன்றவற்றில் கண்காணிக்கப்படல் வேண்டும். PHM அளவில் கண்காணிக்க வேண்டிய குறிகாட்டிகள் பின்வருமாறு.

  a. *அந்த மாதத்தில் நிறுக்கப்பட்ட மொத்த குழந்தைகளின் எண்ணிக்கையில் MAM/SAM உறுதிப்படுத்த CWC க்கு பரிந்துரைக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை*
  b. *ஒரு குறிப்பிட்ட மாதத்தில் CWC க்கு பரிந்துரைக்கப்பட்ட (MAM/SAM) மெலிந்தவையாக சந்தேகிக்கப்படும் மொத்த குழந்தைகளில் MAM என உறுதி செய்யப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை*
  c. *ஒரு குறிப்பிட்ட மாதத்தில் MAM உடன் பராமரிப்பில் உள்ள மொத்த குழந்தைகளின் எண்ணிக்கையில் அந்த மாதத்தில் MAM-ல் இருந்து மீட்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை,*

**3. SAM உள்ள குழந்தைகளின் பரிந்துரை மற்றும் சிகிச்சையை வலுப்படுத்துதல் மற்றும் சிகிச்சை தவறியவர்களைக் குறைத்தலுக்காக முதன்மை நிலை பராமரிப்பு சிகிச்சை நிலையங்களில் (DH/PMCU) நடமாடும் கிளினிக்குகளை (அவுட்ரீச் கிளினிக்குகளை) நிறுவுதல் மற்றும் NRP பற்றிய தகவல் ஓட்டத்தை ஒழுங்குபடுத்தல்**

- NRP க்கு தகுதியான SAM உள்ள அனைத்து குழந்தைகளும் அடையாளம் காணப்பட்டு சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்படல் வேண்டும்

- குழந்தையின் வசிப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள தொடர்புடைய சிறுவர் வைத்திய நிபுணர்/போஷணை வைத்திய நிபுணர்/போஷணை மருத்துவர் மூலம் நடத்தப்படும் குழந்தை மருத்துவ மையம்/மருத்துவமனை போஷணை கிளினிக்கிற்கு பரிந்துரை செய்யப்பட வேண்டும் அதாவது, அருகில் உள்ள மருத்துவமனையின் விசேட குழந்தைகள் நல கிளினிக்/போஷணை கிளினிக் அல்லது இந்த சிறப்பு மருத்துவமனைகளால் நடத்தப்படும் நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்குகள்.

- விசேட குழந்தை மருத்துவ சேவை/போஷணை கிளினிக் என்பவை மாவட்ட மருத்துவமனைகள் (DH)/முதன்மை பராமரிப்பு மருத்துவ பிரிவுகளில் (PMCU) பராமரிப்புக்காக பரிந்துரைக்கப்படும் குழந்தைகளின் சேவைகளை எளிதாக அணுகும் வண்ணம் நடமாடும் (அவுட்ரீச்) குழந்தை மருத்துவம் / மருத்துவமனை போஷணை கிளினிக்குகள் நிறுவப்பட்டு அவர்களது இணக்கம் (compliance) அதிகரிக்கப்படும்.

**நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்குகளின் அமைவிடம் மற்றும் மாதத்திற்கான அமர்வுகளின் எண்ணிக்கை**

- இந்த நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்குகள் எந்தெந்த DH/PMCU இல் நிறுவப்பட வேண்டும் என்பதை அப்பகுதியில் உள்ள குழந்தை மருத்துவ நிபுணர் / போசணை மருத்துவ நிபுணர்/போசணை மருத்துவர், பொருத்தமான நோய் தீர்க்கும் நிறுவனம் இருப்பதைக் கருத்தில் கொண்டு RDHS தீர்மானிக்க வேண்டும். எதிர்பார்க்கப்படும் சேவைச்சுமை, சமூகப் பண்புகள், பெற்றோர்/வளப் பணியாளர்களுக்கான போக்குவரத்து வசதிகள், பிற தளபாடங்கள் போன்றவற்றை கவனத்தில் கொண்டு நிறுவலாம்.
- குழந்தை மருத்துவ நிபுணர் / போசணை மருத்துவ நிபுணர் / போசணை மருத்துவர் மூலம் சிறப்பு சேவைகளை வழங்குவதற்காக அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு நடமாடும்(அவுட்ரீச்) கிளினிக்கும் மாவட்டத்தில் உள்ள ஒரு சிறப்பு மருத்துவமனையுடன் இணைக்கப்பட வேண்டும்.

- நிருவகிக்க வேண்டிய பிள்ளைகளின் எண்ணிக்கை மற்றும் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் கிளினிக் அமர்வுகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட வேண்டும். அமர்வுகள் ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது நடத்தப்படல் வேண்டும்.
- அமைவிடங்கள், கிளினிக் திகதிகள் மற்றும் விசேட மருத்துவமனைக்கான உள்வாங்கு பரப்புகள் மற்றும் ஒவ்வொரு நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்குகளுக்கான உள்வாங்கு பரப்புகள் மாவட்ட MCH குழுவால் சிறுவர் மருத்துவ நிபுணர் / போசணை மருத்துவ நிபுணர் / போசணை மருத்துவர் உடன் இணைந்து RDHS இனால் சரியாக அடையாளம் காணப்பட்டு, RDHS ஊடாக MOH க்களை தொடர்பு கொள்ள வேண்டும். குழந்தைகளை பரிந்துரைப்பதற்கு வசதியாக அந்தந்த MOH க்கள் சிறுவர் கிளினிக் / மருத்துவமனைகள் போசணை கிளினிக்குகள் (விசேட மருத்துவமனை மற்றும் நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்குகள்) உள்ள வரைபடம் வைத்திருக்க வேண்டும். MOH கள் இந்தத் தகவலைத் தங்கள் ஊழியர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் மூலம் சமூகத்திற்குத் தெரிவிக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

**நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்குகளுக்கு குழந்தைகளை பரிந்துரைத்தல்.**

- SAM குழந்தைகள் மற்றும் பருமனான குழந்தைகள் கண்டறியப்பட்டவுடன் நேரடியாக இந்த கிளினிக்குகளுக்கும் மற்றும் விசேட சிறுவர் மருத்துவமனை கிளினிக்குகளுக்கும் /மருத்துவமனை போசணை கிளினிக்குகளுக்கும் நேரடியாகப் பரிந்துரைக்கலாம். மற்றும் வேறு சிக்கலான போசணைப் பிரச்சனைகளையும் குறிப்பிட்டு பரிந்துரைக்கலாம்.
- MOH அலுவலகத்தை தவிர, வெளிநோயாளர் பிரிவுகள், குழந்தை மருத்துவ மனைகள் மற்றும் மருத்துவமனைகளின் போசணை கிளினிக்குகளில் SAM குழந்தைகள் கண்டறியப்படலாம். அவ்வாறு கண்டறியப்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இளம் சிவப்பு நிற பரிந்துரை சிகிச்சை அட்டை (போசணை மறுவாழ்வு அட்டை) SAM கண்டறியப்பட்ட இடத்திலிருந்து வழங்கப்பட வேண்டும். இந்த அட்டையை எடுத்துச் செல்லும் குழந்தைகளுக்கு குழந்தைகள் மருத்துவமனை போசணை கிளினிக் அல்லது நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்கில் நேரடியாக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

**நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்குகளால் வழங்கப்படும் சேவைகள்**

- பரிந்துரைக்கப்பட்ட குழந்தைகளின் உடளவியல் (Anthropometric) மதிப்பீடு
- SAM முகாமைத்துவம்
- மருத்துவ ரீதியாக சிக்கலான MAM மற்றும் அதிக நிறை உட்பட பிற போசணை பிரச்சனைகளின் முகாமைத்துவம்
- தேவைக்கேற்ப ஏதேனும் கூடுதல் / சிகிச்சையுடன் இணைந்த உணவு ஆலோசனை.
- ஒரு சிறுவர் மருத்துவ நிபுணர் போசணை கிளினிக்கை நடத்துகிறார் என்றால், குழந்தைகளின் மருத்துவ பிரச்சனைகளுக்கும் சிகிச்சையளிக்கப்படலாம். ஒரு மருத்துவ போசணை ஆலோசகர் / போசணை மருத்துவர் நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்குகளை நடத்தும் சந்தர்ப்பங்களில்,

சாத்தியமான மருத்துவ பிரச்சனைகள் உள்ள குழந்தைகளை, குழந்தை மருத்துவ ஆலோசகரிடம் பரிந்துரைக்க வேண்டும்.

**பொருட்கள் மற்றும் உபகரணங்களின் விநியோகம்**

- DH/PMCU நிலையத்தின் தலைவர், நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்கிற்கு பொருத்தமான இடத்தை வழங்க வேண்டும், குழந்தைகளின் நீளம் / உயரத்தை அளவிடுவதற்கான நிலையான உடலளவியல் (Anthropometric Equipment) கருவிகள் மற்றும் தேவைப்பட்டால் துணை மருத்துவ பணியாளர்கள் (உ-ம். தாதிய அதிகாரி). நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக் நடத்தப்படும் நிறுவனத்தில் தேவையான பணியாளர்கள் இல்லாத பட்சத்தில், சிறப்பு மருத்துவமனை, தேவையான பணியாளர்களை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக் நடத்துவதற்கான மனித வளங்கள்

| **மனித வளங்கள்** | **பொறுப்புக்கள்** |
|---|---|
| சிறுவர் மருத்துவ நிபுணர் / போசணை மருத்துவ நிபுணர் / போசணை மருத்துவர் | • கிளினிக்கை ஒட்டுமொத்தமாக நடத்துதல், மருத்துவ முகாமைத்துவம் மற்றும் உடனடி மருத்துவ உணவு (RUTF) மற்றும் மருந்திற்கான பொறுப்பு<br>ஒரு குழந்தை மருத்துவ நிபுணர் கிளினிக்கை நடத்துகிறார் என்றால், மருத்துவ பிரச்சனைகள் உள்ள குழந்தைகளின் முகாமைத்துவம் மற்றும் பின்தொடர்தல். |
| தாதிய உத்தியோகத்தர் – 01 | NRP பதிவேட்டில் பதிவு செய்தலும் அதனைப் பேணலும் மற்றும் உடலளவீட்டினை மதிப்பிடுதல் |
| மருந்தாளர் – 01 | மருத்துவரால் பரிந்துரைக்கப்படும் RUTF (உ-ம். BP100) மற்றும் பிற மருந்துகளை வழங்குதல் |
| சுகாதார உதவியாளர் – 01 | அவர்களிற்கான குறிப்பிடப்பட்டுள்ள வேலை விபரத்தின் படி. |
| வேலையாள் – 01 | அவர்களிற்கான குறிப்பிடப்பட்டுள்ள வேலை விபரத்தின் படி. |

நாளொன்றுக்கு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை பொறுத்து அல்லது பிற சேவை தேவைகளுக்கு ஏற்ப மனித வளத்தை அதிகரிக்கலாம்.

- வருகை தரும் குழுவிற்கு (போசணை கிளினிக்கை நடத்தும் அதிகாரி மற்றும் பதிவேடுகள், திரும்பும் பதிவுகள் (Returns), போசணை பொருட்கள் மற்றும் மருந்துகளுக்குப் பொறுப்பான அதிகாரி உட்பட துணை மருத்துவப் பணியாளர்கள் ) RDHS அலுவலகத்தால் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட வேண்டும். நேரடி சுகாதார அமைச்சக மருத்துவமனைகளாக (Line Ministry Hospitals) இருந்தால் நேரடி சுகாதார அமைச்சு அல்லது RDHS அலுவலகம் போக்குவரத்து ஏற்பாட்டினை செய்யலாம்.
- கிளினிக் ஒழுங்கமைப்பு

(1) பதிவு மேசை →(2) காத்திருக்கும் பகுதி → (3) நிறை / நீளம் / உயரம் அளவிடும் இடம் → (4) மருத்துவப் பரிசோதனை மற்றும் போசணை ஆலோசனை இடம் → (5) வெளியேறும் மேசை - NRP பதிவேட்டில் பதிவிடுதல் மற்றும் சந்திப்பு திகதிகளை வழங்குதல் .

- உபகரணங்கள் மற்றும் மருந்துகள்

i. நிறை, நீளம், உயரம் போன்றவற்றை அளவிட பரிந்துரைக்கப்படும் கருவிகள் பின்வருமாறு.
   - இலத்திரனியல் தராசு (Electronic weighing scale)
     (நிலையான நிறைப் பெட்டிகளைப் பயன்படுத்தி இந்த உபகரணத்தை மதிப்பீடு செய்து அளவீடுகளின் துல்லியம் தொடர்ந்து சரிபார்க்கப்படல் வேண்டும்)
   - நீளம் அளக்கும் பலகை மற்றும் உயரம் அளக்கும் கம்பி / பலகை

ii. நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்கின்/ களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான RUTF களஞ்சியம் மற்றும் பிற மருந்துப் பொருட்கள், போசணை மருத்துவ நிபுணர் /போசணை மருத்துவர் இணைக்கப்பட்டுள்ள நிலையத்தால் பெறப்பட்டு வழங்கப்பட வேண்டும். சிறப்பு மருத்துவமனை மூலம் மாதாந்த இருப்பு அறிக்கைப் படிவம் H1158 (Monthly stock Return) ஐப் பயன்படுத்தி சிகிச்சை உணவைப் பெற வேண்டும்.

iii. ஒவ்வொரு குழந்தைக்கும் போதுமானளவு RUTF (உ-ம். BP100) அடுத்த பின்தொடர்தல் திகதி வரை (அடுத்த நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக் திகதி, குறிப்பாக மாதத்திற்கு ஒருமுறை நடத்தப்பட்டால்) வழங்கப்பட வேண்டும்.

**சிறப்பு மருத்துவமனை மற்றும் / அல்லது நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்கில் உள்ள கிளினிக்குகளில் கலந்துகொள்ளும் குழந்தைகளின் கள கண்காணிப்பு**

- PHM கள் சிறப்புப் பராமரிப்புக்காக (SAM அல்லது உடல் பருமன் போன்ற பிற பிரச்சனைகளை நிர்வகிப்பதற்கு) பரிந்துரைக்கப்படும் பிள்ளைகளை தொடர்ச்சியாக, அவர்கள் இந்த கிளினிக்குகளில் தவறாமல் கலந்து கொண்டு சிகிச்சைக்கு இணங்குவதை உறுதிசெய்ய வேண்டும்.
- SAM என சந்தேகிக்கப்படும் குழந்தைகள் MOH நிலையம் அல்லாத பிற நிறுவனங்களால் நேரடியாக நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்கிற்கு அனுப்பப்பட்டால், SAM உறுதிசெய்யப்பட்டவுடன், நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்கை நடத்தும் அதிகாரிகள் அந்தந்த பகுதி PHM கள் களத்தில் பின்தொடர்வதற்கு வசதியாக உரிய MOH க்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.
- SAM குழந்தைகளின் களப் பின்தொடர்தல் MOH இன் உள்ளூர் மற்றும் மாதாந்த மாநாடுகளில் கண்காணிக்கப்பட வேண்டும். PHM அளவில் கண்காணிக்க பரிந்துரைக்கப்பட்ட குறிகாட்டிகளாவன:
  a. மாதத்தின் போது நிறையெடுக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையில் MAM/SAM ஐ உறுதிப்படுத்த CWC க்கு பரிந்துரைக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை
  b. ஒரு குறிப்பிட்ட மாதத்தில் CWC க்கு பரிந்துரைக்கப்பட்ட மெலிதானவர்கள் (MAM/SAM) என சந்தேகிக்கப்படும் மொத்த குழந்தைகளில் SAM என உறுதிசெய்யப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை
  c. ஒரு குறிப்பிட்ட மாதத்தில் SAM உள்ளதாக அடையாளம் காணப்பட்ட எண்ணிக்கையில் சிறப்புப் பராமரிப்புக்காகப் பரிந்துரைக்கப்பட்ட SAM குழந்தைகளின் எண்ணிக்கை
  d. ஒரு குறிப்பிட்ட மாதத்தில் PHM பகுதியில் உள்ள SAM குழந்தைகளின் எண்ணிக்கையில் RUTF (BP 100) உடன் சிகிச்சை பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை

**தகவல் ஓட்டம்**

- போசணை மீளமைப்பு அட்டை, NRP பதிவேடு போசணை மீளமைப்புத் திட்டம் - மாதாந்த பின்னூட்டல் சாராம்சப் படிவம், மற்றும் மாதாந்த இருப்பு அறிக்கைப் படிவம் (H1158) உள்ளிட்ட SAM பற்றிய தகவல் படிவங்கள் மூலம் சரியான நேரத்தில் தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.
- SAM குழந்தைகளுக்கு அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் ஒரு போசணை மீளமைப்பு அட்டை (இளஞ்சிவப்பு) வழங்கப்பட வேண்டும் (NRP card). இது இரட்டை நோக்கங்களுக்காக பயன்படும் அதாவது ஒரு பரிந்துரை அட்டையாகவும், சிகிச்சை மற்றும் பின்தொடர்தல் அட்டையாகவும் பயன்படுகிறது. இந்த அட்டை இல்லாமல் ஒரு குழந்தை நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்கிற்குச் சென்றால், கிளினிக்கிலிருந்து குழந்தைக்கு புதிய அட்டை வழங்கப்படல் வேண்டும்.

- சிறுவர் மருத்துவமனை கிளினிக் / மருத்துவமனை போசணை கிளினிக்கில் பரிந்துரைக்கப்படும் மருத்துவமனையின் வெளிநோயாளிகளுக்காக பராமரிக்கப்படும் NRP பதிவேடானது, நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்கிற்கு செல்லும் குழுவால் எடுத்துச் செல்லப்பட வேண்டும். SAM குழந்தைகளின் வழக்கமான பதிவுகள் இந்தப் பதிவேட்டில் பதிவு செய்து பராமரிக்கப்பட வேண்டும்.
- சிறப்பு நிலையத்தின் மாதாந்த பின்னூட்டத்தில் (போசணை மீளமைப்புத் திட்டம் - மாதாந்த பின்னூட்டல் சாராம்சப் படிவம்) நடமாடும் (அவுட்ரீச்)கிளினிக்குகளுக்கு வரும் குழந்தைகளின் தகவல்களையும் உள்ளடக்கியிருக்க வேண்டும்.
- RUTF பற்றிய பயன்பாட்டு புள்ளிவிவரங்கள், H1158 மூலம் கண்காணிக்கப்பட வேண்டும், இது சிறப்பு நிலையத்தின் தலைமை மருந்தாளரால் தயாரிக்கப்பட வேண்டும்.
- தேசிய ரீதியில் குடும்ப சுகாதார பணியகம் பொறுப்பானதாகவும் மாவட்ட ரீதியில் CCP/MOMCH போன்றோர், தொடர்புடைய பதிவுகள், பதிவேடுகள், படிவங்களை வழங்குவதற்கு பொறுப்பானவர்களாகும்.
- MAM மற்றும் SAM பற்றிய தரவுத் தளமானது குடும்ப சுகாதார பணியகத்தின் eRHMIS இல் பராமரிக்கப்படும்.

4. **நோயுற்ற குழந்தைகளுக்கான வெளிநோயாளிகள் பிரிவில் (OPD) உணவு ஆலோசனைகளை மேம்படுத்துதல், மாவட்ட வைத்தியசாலைகள்/ முதன்மை மருத்துவ பராமரிப்பு நிலையங்களில் (DH/PMCU) சிறப்புக் கவனம் செலுத்துதல்**

நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளில் வளர்ச்சி குன்றும் அபாயம் உள்ளது, இது கவனிக்கப்படாமல் விட்டால் MAM அல்லது SAM ஆக மோசமடையும் அல்லது நீண்ட கால வளர்ச்சிக் குன்றலுக்கு உட்பட்டு குள்ளம் அல்லது பிற போசணைப் பிரச்சனைகளை உருவாக்கும். நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் நோய் தீர்க்கும் நிலையங்களின் வெளிநோயாளர் பிரிவுகளுக்கு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். எனவே, நோயுற்ற குழந்தைகளின் வளர்ச்சி குறைவதைத் தடுக்க, நோய் உள்ள மற்றும் குணமடையும் காலத்தில், தகுந்த உணவு ஆலோசனைகளை வழங்குவற்கு OPD ஒரு சிறந்த பிரிவாகும். OPD பிரிவில், நோய்களைத் தொடர்ந்து வளர்ச்சி குறைவதை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, சரியான உணவு உளவள ஆலோசனை மூலம் அதை மாற்றியமைக்க முடியும்.

**குழந்தை போசணைக் குறைபாட்டை தடுப்பதில் OPD யின் பங்கு**

- ஒரு குழந்தை OPD க்கு வரும் போது, குழந்தையின் CHDR இல் உள்ள மூன்று வளர்ச்சி வரைபுகளையும் எப்போதும் ஆராயவும். வழக்கமான வளர்ச்சிக் கண்காணிப்புக்கு குழந்தையை கள நிலையத்திற்கு அழைத்துச் செல்ல பெற்றோர்கள் / பராமரிப்பாளர்களை ஊக்குவிக்கவும்.
- ஒரு குழந்தைக்கு நோயின் போது உணவளிக்கும் நடைமுறைகளைப் பற்றி எப்பொழுதும் விசாரித்து, நோய் காரணமாக வளர்ச்சி நிலை மோசமடைவதைத் தடுக்க தகுந்த உளவள ஆலோசனைகளை வழங்கவும் (நோயின் போது உணவளிப்பது பற்றிய உளவள ஆலோசனை).
- குணமடையும் கட்டத்தில் பின்தொடர்தல் வருகை திட்டமிடப்பட்டிருந்தால், நோய்க்குப் பிறகு குழந்தை வயதுக்கு ஏற்ற உணவூட்டல் முறையை மீண்டும் தொடங்குவதை உறுதி செய்யவும், குணமடையும் போது தகுந்த உணவளிப்பது பற்றிய உளவள ஆலோசனைகளை வழங்கவும். வளர்ச்சி வரைபுகளை ஆய்வு செய்து, வளர்ச்சியில் பின்னடைவு கண்டறியப்பட்டால், குழந்தைக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும் மற்றும் பின்தொடர்தல் மற்றும் மேலதிக கவனிப்புக்காக கள சுகாதார ஊழியர்களிடம் (PHM, MOH) பரிந்துரைக்கப்பட வேண்டும்.
- OPD க்கு வரும் குழந்தையில் MAM அல்லது SAM சந்தேகப்பட்டால், உடலளவியல் உறுதிப்படுத்தலுக்காகவும் MAM முகாமைத்துவத்திற்காகவும் MOH க்கு அனுப்பவும் மற்றும் SAM முகாமைத்துவத்திற்கு குழந்தை மருத்துவ நிபுணர் / போசணை மருத்துவ அதிகாரி / போசணை மருத்துவர் போன்றவர்களுக்கு அனுப்ப வேண்டும்.
- ஒரு குழந்தைக்கு SAM இருப்பது புதிதாக உறுதிசெய்யப்பட்டால், போசணை மீளமைப்பு அட்டையை வழங்கி, சிறப்புப் பராமரிப்புக்காக அருகிலுள்ள நிலையத்திற்கு (சிறப்பு நிறுவனம் அல்லது நடமாடும் (அவுட்ரீச்) கிளினிக்) பரிந்துரைக்கவும். SAM சிகிச்சை தவறியவர்கள் இருந்தால், சிகிச்சையை மீண்டும் தொடங்குவதை ஊக்குவிக்க சரியான முறையில் பரிந்துரைக்கவும்.
- இந்தக் குழந்தைகளைப் பின்தொடர்வதை உறுதிசெய்ய MOH க்கு எப்பொழுதும் தெரிவிக்கவும் மற்றும் பராமரிப்பாளருக்குத் தெரியப்படுத்தவும் - இந்த நோக்கத்திற்காகப் CHDR இல் உள்ள பரிந்துரைப் பக்கம் பயன்படுத்தப்படும்.
- குழந்தையின் வளர்ச்சி நிலைகளை கண்டறிவதற்காக வளர்ச்சி வரைபுகளின் விளக்கம் மற்றும் போசணை உளவள ஆலோசனை அடிப்படை விடயங்கள் குறிப்பாக நோயின் போது உணவளித்தல் ஆகியவை தொடர்பாக OPD மருத்துவப் பணியாளர்களுக்கு மாவட்டமானது தகுந்த பயிற்சியை ஏற்பாடு செய்ய வேண்டும்.

MAM/SAM முகாமைத்துவம் பற்றிய விரிவான வழிகாட்டல்களுக்கு, “ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் கடுமையான மற்றும் மிதமான கடுமையான போசணை குறைபாடுகளை நிர்வகித்தல் - இலங்கை சுகாதார அமைச்சின் சுகாதாரப் பணியாளர்களுக்கான கையேடு“ என்ற வழிகாட்டுதலைப் பார்க்கவும். மிதமான மற்றும் கடுமையான போஷணைக் குறைபாடு கொண்ட 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் வளர்ச்சி கையேடு, தொடர்புடைய சுற்றறிக்கைகள் மற்றும் ஆவணங்களை பார்க்க பின்வரும் இணையத்தளத்தை அணுகலாம்.

**Website:**
http://fhb.health.gov.lk/index.php/en/technical-units/child-nutrition-unit
**SAM & MAM Management Folder:**
https://drive.google.com/drive/folders/1JeyATdZeLBKmsNvjdUGtbZJan11pt65R?usp=sharing